முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமைச் செயலகத்தில், திருச்சி ஆர்.எஸ்.கே. மேல்நிலைப்பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவி வில்லெட் ஓவியா, வெளிமண்டத்தில் உள்ள ஆக்ஸிசன், கார்பன் – டை – ஆக்ஸைடு, கார்பன் மோனாக்சைட் மற்றும் பிற வாயுக்களின் அளவைக் கணக்கிடுவதற்காக அனிதா சாட் என்ற சிறிய செயற்கை கோளினை தயாரித்தமைக்காக சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது முதலமைச்சர் அந்த மாணவிக்கு நினைவு பரிசு வழங்கி வாழ்த்தினார். பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், அக்னி பவுன்டேஷன் நிறுவனர் அக்னிஸ்வர் ஜெயபிரகாஷ் மற்றும் வில்லெட் ஓவியாவின் தாயார் ஆகியோர் உடன் உள்ளனர்.

தமிழ்நாட்டில் வெற்றிடம் இல்லை...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுப் போகாது. உருவம் மாறினாலும், எப்பொழுதும் உள்ளத்தால் நீ சுண்டெலிதான். எனவே, நீ சுண்டெலியாக இருக்கத்தான் லாயக்கு" என்று கூறி சென்று விட்டார்.

வெற்றி நிச்சயம்

ஆக உள்ளத்தில் தன்னம்பிக்கையும், உயர்ந்த எண்ணமும், அதற்கான அச்சமற்ற தன்மையும் இல்லாதவர் எதையும் அடையவோ, சாதிக்கவோ முடியாது. உங்களைப் பற்றி நீங்கள் எப்படி எண்ணுகிறீர்களோ அப்படித்தான் ஆவீர்கள். தாழ்வு மனப்பான்மையை விலக்கிவிட்டு துணிச்சலுடன் செயல்பட்டால் உங்களால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. நற்சிந்தனை, தன்னம்பிக்கை ஆகியவை உங்கள் வாழ்வை வானளவிற்கு உயர்த்தும். நம்பிக்கையுடன் நீங்கள் செயல்பட்டால், உங்கள் வாழ்வில் வெற்றி நிச்சயம்.

அதுமட்டுமல்ல, மதுரை மாவட்டத்தில் அம்மா பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததின் மூலமாக பல்வேறு திட்டங்களை அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்தியிருக்கின்றது.

காலவாசல் சந்திப்பில் ரூ.54 கோடியில் பறக்கும் பாலம்

மதுரையில் முதன்முறையாக போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு, காலவாசல் சந்திப்பில் ரூபாய் 54 கோடி மதிப்பீட்டில் பறக்கும் பாலம் அமைக்கும் பணிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பரவை – கோரிப்பாளையம் இடையே வைகையாற்றின் குறுக்கே ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் விரைவில் கட்டப்படும். ரூபாய் 51 கோடி மதிப்பீட்டில், மதுரை, அழகர்கோவில் சாலையை 4 வழிச்சாலையாகவும், வைகை வடகரையில் குருவிக்காரன் சாலையிலிருந்து அண்ணாநகர் சாலை வரை பாலம் அமைக்கும் பணி என்னால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளது.

சாலை விரிவாக்கம்

திப்பம்பட்டி முதல் நகரி வரை 31 கி.மீ. நீளம் உள்வட்டச் சுற்றுச்சாலை அமைப்பது, பழங்கா நத்தத்தில் 6 வழித்தட ரெயில்வே மேம்பாலமும், திருமங்கலம் அருகில் குண்டாறு – சவுண்டாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கும் மற்றும் மதுரையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு, கோரிப்பாளையம் மற்றும் பெரியார் பேருந்து நிலையம் முதல் யானைக்கால் வரை உயர்மட்ட பறக்கும் பாலம் அமைக்க, மேற்படி திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, உத்தங்குடி முதல் கப்பலூர் வரை 27.2 கி.மீ. நீளமுள்ள மதுரை சுற்றுச்சாலை 2 வழிச்சாலையிலிருந்து 4 வழிச்சாலையாக அகலப்படுத்தி தரம் உயர்த்தும் பணி ரூபாய் 214 கோடி மதிப்பீட்டில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

பஸ்போர்ட்

அதோடு, இங்கே, விமான நிலையத்தில் இருப்பது போல, அனைத்து வசதிகளையும் கொண்ட, நவீன பேருந்து நிலையம் 'பஸ்போர்ட்' (Busport) உடனடியாக, விரைவாக துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் இடம் பற்றாக்குறை இருப்பதாக ஏற்கனவே சுட்டிக்காட்டி, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு, அதற்கு கூடுதல் கட்டடம் கட்டப்படும் என்ற அறிவிப்பைத் தந்து அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, இப்பொழுது ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டவுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நீங்கள் வைத்த கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக கூடுதல் கட்டடம் கட்டித்தரப்படும்.

மதுரை மாநகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சுமார் ரூபாய் 1350 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழா இந்த மதுரையிலேதான் துவக்கப்பட்டுள்ளது. இந்த ராசியான இடத்தில் எதைத் தொடங்கினாலும் அது ராசியாக நல்லபடியாக நடக்கும்.

எம்.ஜி.ஆர். 1986ல் மத்திய அரசுக்கு கடிதம் எழுதினார். அப்பொழுதே காவிரி மேலாண்மை வாரியம், காவிரி முறைப்படுத்தும் குழு அமைக்க வேண்டுமென்று கடிதத்தின் மூலமாக கேட்டிருக்கின்றார். அதன் தொடர்ச்சியாக அம்மா பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து, தமிழக மக்களின் உணர்வை, தமிழக டெல்டா பாசன விவசாயிகளின் உணர்வை வெளிக்கொண்டு வரும் விதமாக சட்டப்பூர்வமான நடவடிக்கையை எடுத்தார். அதன் மூலமாக மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டது.

2007ல் நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு வந்தது. அப்பொழுது மாநிலத்தில் தி.மு.க. ஆட்சி, மத்தியிலும் காங்கிரஸ் ஆட்சியின் கூட்டணியில் இடம் பெற்றிருந்தார்கள். அப்பொழுதே இந்த நடுவர்மன்ற தீர்ப்பை வெளியிட்டிருக்கலாம். அப்பொழுதெல்லாம் அவர்கள் மக்களைப் பற்றியும், விவசாயிகளை பற்றியும் சிந்திக்கவில்லை. அவர்கள் சிந்தித்ததெல்லாம் குடும்பத்தைப் பற்றி தான். எந்த இலாக்காவைப் பெற வேண்டும், மத்தியிலே என்ன அதிகாரம் பெறவேண்டும் என்று தான் நினைத்தார்களே ஒழிய தமிழக மக்களை பற்றி நினைக்கவில்லை.

ஆனால் அம்மா பல முறை மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி, நடுவர்மன்ற தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட வேண்டுமென்ற கோரிக்கை வைத்தார். ஆனால், மத்தியில் இருந்தவர்கள் செவிசாய்க்க வில்லை. சட்டப்போராட்டம் நடத்தி அதிலே வெற்றிகண்டு விவசாயிகளின் உரிமையைப் பெற்றுத் தந்தார் அம்மா. ஆனால், இன்றைக்கு தி.மு.க.வினர் நம்மைப் பார்த்துக் கேட்கின்றார்கள், அண்ணா தி.மு.க. மத்தியில் அழுத்தம் கொடுக்கவில்லையென்று.

17 நாட்கள் முடங்கியது

நாடாளுமன்றக் கூட்டம் எப்பொழுது ஆரம்பித்ததோ அது முடிகின்ற வரை சுமார் 17 நாட்கள் தொடர்ந்து பாராளுமன்றத்தில் நம்முடைய தமிழக மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கின்ற விதமாக, டெல்டா பாசன விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரை பெற்றுத் தருவதற்காக உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை 6 வாரகாலத்திற்குள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக இணைந்து குரல் கொடுத்தார்கள். 17 நாட்கள் நாடாளுமன்றம் முடங்கியது. ஒரு மாநில பிரச்சினைக்காக 17 நாட்கள் நாடாளுமன்றம் முடங்கிய வரலாற்றை நாம் படைத்திருக்கின்றோம். எந்தளவிற்கு அழுத்தம் கொடுத்திருக்கின்றோம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

உச்சநீதிமன்ற தீர்ப்பை மத்திய அரசு நடைமுறைப்படுத்தவில்லை, இருந்தாலும், நாம் சட்டப்பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்வோம். நிச்சயமாக, உறுதியாக அம்மாவினுடைய அரசு உணர்வுப்பூர்வமான நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றது.

உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டிருக்கின்றோம். ஆகவேதான், துணை முதலமைச்சர் வருகின்ற 2ம் தேதி அண்ணா தி.மு.க. சார்பாக அறவழியிலே உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்ற அறிவிப்பை இந்த மணவிழாவில் தெரிவித்திருக்கின்றார்.

காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரைஅந்தஅறவழிஉண்ணாவிரத போராட்டம் நடக்கும். நம்முடைய ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய, விவசாயிகளினுடைய உணர்வை வெளிப்படுத்துவோம் என்று தெரிவித்து அம்மா என்னனென்ன திட்டங்கள் கொண்டு வந்தாரோ அந்தத் திட்டங்களை எல்லாம் அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

வெற்றிடமா?

சிலபேர் அதை புரிந்துகொள்ளாமல் காலி இடத்தை நிரப்பப்போகிறோம் என்று புறப்பட்டுவிட்டார்கள். எங்கே காலியிடம் இருக்கின்றது. எல்லாம் முழுவதுமாக இருக்கின்றது. வேறு மாநிலத்தில் வேண்டுமானால் சென்று பார்க்கலாம். தமிழ்நாட்டில் இடம் கிடையாது.

நான் 1974ல் கழகத்தில் இணைந்தேன். என்னுடைய சிற்றூரிலே துணை கழகச் செயலாளராக என்னுடைய பணியை துவங்கினேன். படிப்படியாக உயர்ந்து இந்த நிலைக்கு வந்திருக்கின்றேன். ஒன்றரை கோடி தொண்டர்களை கொண்ட, இளைஞர்கள் அதிகம் உள்ள ஒரே இயக்கம் அண்ணா தி.மு.க

அண்மையிலே தி.மு.க.வினர் மாநாடு நடத்தினார்கள். இங்கே வந்த கூட்டம் கூட கிடையாது. இங்கே, எங்கே பார்த்தாலும் மக்கள் தலைகளை காணமுடிகிறது. கடல்போல் மக்கள் கூட்டம் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. அந்தளவிற்கு மக்கள் குழுமி இந்த மணமக்களை வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

அம்மா இருக்கின்ற காலத்திலே அவருடைய பிறந்தநாள் வருகின்றபொழுது, ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குங்கள், அதுதான் எனக்குப் பெருமை என்ற கோரிக்கையை எங்களிடத்தில் குறிப்பிட்டார். அம்மா மறைவிற்குப் பிறகு, அம்மா இருந்த காலத்திலே, என்னென்ன நடைமுறைகளை பின்பற்றினோமோ அதையே பின்பற்றி நடந்து கொண்டிருக்கின்றோம்.

இந்த மணவிழாவிற்கு வந்திருக்கின்ற அத்தனை நல்ல உள்ளங்களும், இந்த மணமக்கள் பல்லாண்டு வாழவேண்டும், உங்களுடைய இல்வாழ்க்கையில் சிறப்பாக வாழவேண்டுமென்பதற்காக இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று திருமணம் செய்துள்ள மணமக்கள், கல்வி, புகழ், வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பொறுமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் என்ற 16 செல்வங்களையும் பெற்று, வாழ்வாங்கு வாழ, நீடுழி வாழ, எல்லா வளங்களும் பெற்று வாழவேண்டுமென்று இத்தருணத்திலே வாழ்த்தி, அனைத்து இன்ப துன்பங்களிலும் ஒருங்கிணைந்து, பெற்றோர், சுற்றத்தார் நல்லறம் காத்து நாடும், வீடும் சிறக்க பல்லாண்டு வாழ்க! வாழ்க! என உங்களோடு நானும் சேர்த்து வாழ்த்தி, இந்த விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் அதோடு வருவாய்த்துறை அமைச்சர் மிகச்சிறப்பாக, எழுச்சியாக அனைத்து மாவட்டங்களுக்கும் முன் மாதிரியாக இந்த திருமணத்தை நடத்தி வைத்து அவருக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்து, அவரோடு இணைந்து பணியாற்றிய அனைத்து ஜெயலலிதா பேரவை மாவட்டச் செயலாளர்களுக்கும், அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.இவ்வாறு எடப்பாடி பழனிசாமி பேசினார்.

வாகனங்களுக்கான இன்சூரன்ஸ் கட்டணம் உயர்வு: ஏப்ரல் 1–ந்தேதி அமல்

சேலம், மார்ச்.30

வாகனங்களுக்கான இன்சூரன்ஸ் கட்டணத்தை கடுமையாக உயர்த்தி இந்திய இன்சூரன்ஸ் ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்த கட்டண உயர்வு வருகிற 1ந் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

2018–19ம் ஆண்டுக்கு இருசக்கர வாகனம் மற்றும் லாரி உள்ளிட்ட கனரக வாகனங்களுக்கான இன்சூரன்ஸ் கட்டணத்தை, இந்திய இன்சூரன்ஸ் ஒழுங்குமுறை ஆணையம் கடுமையாக உயர்த்தி உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த கட்டண உயர்வு 1ந் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

அதன்படி, 151 சி.சி. முதல் 350 சி.சி. இழுவைத்திறன் கொண்ட இருசக்கர வாகனங்களுக்கு ரூ.985 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட ரூ.98 அதிகம் ஆகும். அதாவது 11 சதவீத உயர்வு.

350 சி.சி. இழுவைத்திறனுக்கு மேல் உள்ள இருசக்கர வாகனங்களுக்கு ரூ.2,323 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட ரூ.1,304 அதிகம் ஆகும். அதாவது 128 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

7,500 முதல் 12 ஆயிரம் கிலோ எடை வரை உள்ள சிறிய சரக்கு லாரிகளுக்கு ரூ.24 ஆயிரத்து 190 என நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இது கடந்த ஆண்டை விட ரூ.4 ஆயிரத்து 523 அதிகம். அதாவது 23 சதவீத உயர்வு ஆகும்.

12 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை எடையுள்ள (6 சக்கர லாரி) வாகனங்களுக்கு ரூ.32 ஆயிரம் 367 நிர்ணயம். இது கடந்த ஆண்டை விட ரூ.3,468 அதிகம். அதாவது 12 சதவீதம் உயர்ந்துள்ளது.

20 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை எடையுள்ள (10, 12, 14 சக்கரம்) வாகனங்களுக்கு ரூ.39 ஆயிரத்து 849 ஆகும். கடந்த ஆண்டை விட ரூ.8 ஆயிரத்து 223 அதிகம் ஆகும். இது 26 சதவீத உயர்வு ஆகும். 40 ஆயிரத்திற்கு மேல் எடையுள்ள வாகனங்களுக்கு ரூ.38 ஆயிரத்து 308 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட ரூ.5,284 அதிகம். அதாவது 16 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதுபோல பயணிகள் சவாரி ஆட்டோ, 17 பயணிகள் செல்லக்கூடிய வாகனம் ஆகியவற்றுக்கும் 17 சதவீதம் வரை இன்சூரன்ஸ் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

புதிய பாடத்திட்ட புத்தகங்களை 'லேமினேஷன்': அரசு ஆலோசனை

சென்னை, மார்ச்.30

புதிய பாடத்திட்டத்தின் கீழ் அச்சடிக்கப்பட்ட 1, 6, 9, 11ம் வகுப்பு பாடப்புத்தகங்களை 'லேமினேசன்' செய்ய அரசு ஆலோசனை செய்து வருவதாக அதிகாரி தெரிவித்தார்.

தமிழகத்தில் பள்ளி பாடத்திட்டம் பல ஆண்டுகளாக மாற்றப்படாததால், அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மு.அனந்தகிருஷ்ணன் தலைமையிலான குழுவினர் புதிய பாடத்திட்டத்தை தயாரித்தனர். அதன்படி 2018–2019ம் கல்வி ஆண்டு முதல் 1, 6, 9 மற்றும் 11ம் வகுப்புகளுக்கு புதிய பாடத்திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் பணிகள் கழக அதிகாரி ஒருவர் கூறியதாவது:

வருகிற கல்வி ஆண்டில் மாணவ–மாணவிகளுக்கு பள்ளிகள் திறக்கும் நாளில் பாடப்புத்தகங்களை வழங்க ஏதுவாக 2, 3, 4, 5, 7, 8, 10 மற்றும் 12ம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்கள் ஏற்கனவே அச்சடிக்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டன.

வேலைவாய்ப்பை உருவாக்கும் பாடங்கள்

இப்போது புதிய பாடத்திட்டத்தின் கீழ் உள்ள பாடப்புத்தகங்கள் அச்சடிக்கப்படுகிறது. இதில் ஏற்கனவே உள்ள புத்தகத்தைவிட அதிக பக்கங்கள் இருக்கும். நிறைய படங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. 9 மற்றும் 11ம் வகுப்பில் வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையிலான பாடங்கள் உள்ளன. பாடப்புத்தகங்கள் அனைத்தும் பள்ளிகள் திறக்கும் முன்பாக அனுப்பப்பட்டுவிடும்.

பக்கங்கள் அதிகமாக இருப்பதால் புத்தகங்கள் பிரிந்துபோகாமல் இருக்க முன்பைவிட கனமான, பளபளப்பான அட்டையால் பைண்டிங் செய்யப்படுகிறது. புத்தகங்களை 'லேமினேசன்' செய்தால் பக்கங்கள் பிரிந்துபோகாது என்பதால் லேமினேசன் செய்து வழங்கலாமா? என்று அரசு ஆலோசித்து வருகிறது.

இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் நடைபெற்ற மாபெரும் ஜல்லிக்கட்டு போட்டியில் சிறந்த காளையாக தேர்வு பெற்ற காளையின் உரிமையாளருக்கு மாருதி ஆல்டோ காரை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் வழங்கினார்.

8K Miles Software Services Limited

CIN: L72300TN1993PLC101852
Regd. Off.: # 5, II Floor, Srinivas Towers, Cenotaph Road,
Teynampet, Chennai-600 018 Ph:044-6602 8034
Email: contactus@8kmilessoftwareservices.com
Website: www.8kmilessoftwareservices.com

GENERAL NOTICE TO THE MEMBERS

NOTICE is hereby given that pursuant to section 201 of the Companies Act, 2013, the company proposes to make an application to the Central Government seeking approval for the reappointment of Mr. Suresh Venkatachari (DIN:00365522) as the Managing Director of the company for a period of 5 years from September 4, 2017 as the appointee has not been a resident of India for the past 12 months within the meaning of Part I of Schedule V to the said Act.

By the order of the Board
For 8K Miles Software Services Limited

Place: Chennai
Date: 29.03.2018

Jayashree Jagannathan
Company Secretary

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
(மோட்டார் வாகன விபத்து
தீர்ப்பாயம்) செங்கல்பட்டு
எம்.சி.ஓ.பி.85/2015

ரவினா சிங் மற்றும் இருவர்
...மனுதாரர்கள்
எதிர்
சசிகலா மற்றும் ஒருவர்
...எதிர்மனுதாரர்கள்

பெறுநர்
திருமதி சசிகலா
க/பெ.ஜானகிராமன்,
டிப்பர் லாரி உரிமையாளர்,
25, பிள்ளையார் கோவில் தெரு,
புதுப்பட்டு, சென்னை–69

மனுதாரர் வக்கீல் கொடுத்த அறிவிப்பு

மேற்படி வழக்கின் மனுதாரர் ரவினாசிங் 12.03.2015 அன்று நடந்த விபத்தில் இறந்து போன தனது கணவர் முஸாப்பிர் சிங், இறப்புக்காக நஷ்டஈடு கோரி மேற்படி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி விபத்துக்கு காரணமான டிப்பர் லாரி பதிவு எண். TN 22 – CT – 2205 உரிமையாளரான தங்களை முதல் எதிர்மனுதாரராக சேர்த்துள்ளார். தங்களுக்கு எதிராக வழக்கு 18.04.2018 அன்று மேற்படி நீதிமன்றத்தில் தாங்கள் ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. தங்களுக்கு ஆட்சேபணை இருந்தால் தாங்களோ அல்லது தங்களின் வழக்கறிஞரோ 18.04.2018 அன்று காலை 10 மணிக்கு ஆஜராகி ஆட்சேபணை தெரிவிக்கலாம் தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

G.G.ரமேஷ்
வழக்கறிஞர்

படிவம் ஏ

பொது அறிவிப்பு

(நொடித்து போன மற்றும் திவால் போர்டு ஆப் இந்தியா (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால் தீர்மானம் நடைமுறைகள்) விதிகள் 2016–ன் விதி 6ன் கீழ்)

டிஷ்நெட் வயர்லஸ் லிமிடெட் கிரிடிட்டார்களின் கவனத்திற்கு

தொடர்புடைய விவரங்கள்

1.	நிறுவன கடனாளர் பெயர்	டிஷ்நெட் வயர்லஸ் லிமிடெட்
2.	நிறுவன கடனாளர் இணைத்த தேதி	மார்ச் 10, 1998
3.	நிறுவன கடனாளரை இணைத்த/பதிவு செய்த அதிகாரி	கம்பெனிகள் சட்டம் 1956ன் கீழ் ஆர்ஓசி–மும்பை
4.	நிறுவன கடனாளரின் கார்ப்பரேட் அடையாள எண்	U74999MH1998PLC283931
5.	நிறுவன கடனாளரின் பதிவு அலுவலகம் மற்றும் பிரின்ஸ்பல் அலுவலக முகவரி	பதிவு அலுவலகம்: ஓபஸ் சென்டர், 47, சென்ட்ரல் ரோடு, துங்கா பாரடைஸ் எதிரில் எம்ஐடிசி அந்தேரி கிழக்கு, மும்பை–400093, மகாராஷ்டிரா இந்தியா கார்ப்பரேட் அலுவலகம்: 5வது தளம், கட்டிடம் எண் 10ஏ, டிஎல்எப் சைபர் சிட்டி, டிஎல்எப் பேஸ் II, குருகிராம், ஹரியானா 122 002.
6.	நிறுவன கடனாளரின் திவால் தன்மை துவங்கும் தேதி	மார்ச் 19, 2018
7.	திவால் தீர்மான நடவடிக்கை முடிப்பதற்கான உத்தேச தேதி	செப்டம்பர் 15, 2018 கார்ப்பரேட் திவால் தீர்மான நடைமுறைகள் துவங்கிய நாளிலிருந்து 180 நாட்கள்
8.	இடைக்கால தீர்மான புரொபஷனாக செயல்படும் திவால் புரொபனல் பெயர் மற்றும் பதிவு எண்	பெயர்: விஜய்குமார் வி அய்யர் பதிவு எண்.: IBBI/IPA-001/IP-P00261 /2017-18/10490
9.	குழுவிடம் பதிவு செய்த இடைக்கால தீர்மான புரொபஷனல் முகவரி மற்றும் இமெயில்	பதிவு அலுவலகம்: டிலோயிட் டச் டோமட்சு இந்தியா எல்எல்பி இந்தியாபுல்ஸ் பைனான்ஸ் சென்டர், டவர் 3, 27வது தளம், சேனாபதி பபட் மார்க், எல்பின்ஸ்டன் ரோடு (மேற்கு), மும்பை–400013, மகாராஷ்டிரா, இந்தியா. பதிவு பெற்ற இமெயில் ஐடி: viyer@deloitte.com
10.	வரிசை எண். 9ல் கொடுக்கப்பட்டுள்ளதற்கு வேறுபட்டிருப்பின் இடைக்கால தீர்மான புரொபஷனலுடன் தொடர்பு கொள்ள பயன்படும் முகவரிமற்றும் இமெயில்	தொடர்பு முகவரி: டிலோயிட் டச் டோமட்சு இந்தியா எல்எல்பி, 22வது தளம், டிஎல்ப் எபிடோம், கட்டிடம் எண் 5, டிவர் ஏ, டிஎல்எப் சைபர் சிட்டி, டிஎல்எப் பேஸ் III, குருகிராம், ஹரியானா 122 002. இந்தியா இமெயில் ஐடி indishnetip@deloitte.com
11.	கோரிக்கைகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	ஏப்ரல் 11, 2018##

இடைக்கால தீர்மான புரொபஷனலை நியமனம் செய்ய மார்ச் 19, 2018 அன்று என்சிஎல்டி, மும்பை பெஞ்ச் ஆணையை நிறைவேற்றியது. ஆனால் அவை வெளியிடப்பட்டு என்சிஎல்டி இணையதளத்தில் படியேற்றம் செய்யப்பட்டது மற்றும் இடைக்கால தீர்மான புரொபஷனலுக்கு மார்ச் 28, 2018 அன்று தெரிவிக்கப்பட்டது. எனவே கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக மார்ச் 28, 2018லிருந்து 14 நாட்கள் பரிசீலிக்கப்பட்டது.

டிஷ்நெட் வயர்லஸ் லிமிடெட்டிற்கு எதிரான நிறுவன திவால் தீர்மான நடைமுறைகளை மார்ச் 19, 2018 அன்று துவங்குவதற்கு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் ஆணையிட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

டிஷ்நெட் வயர்லஸ் லிமிடெட்டின் கிரிடிட்டார்களுக்கு ஏதேனும் உரிமை இருப்பின் அதற்கான அத்தாட்சியை அயிட்டம் எண். 10ல் குறிப்பிட்டுள்ள முகவரியில் இருக்கும் இடைக்கால தீர்மானத்துக்கான புரொபஷனலிடம் ஏப்ரல் 11, 2018 அன்றோ அல்லது அதற்கு முன்போ அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கிரிடிட்டார்கள் மின்னணு மூலமே உரிமைக்கான அத்தாட்சிகளை அளிக்க வேண்டும். இதர மற்ற கிரிடிட்டார்கள் நேரடியாக, தபால் மூலம் அல்லது மின்னணு முறையில் தங்களது உரிமைக்கான அத்தாட்சிகளை அளிக்கலாம்.

நொடித்து போன மற்றும் திவால் போர்டு ஆப் இந்தியா (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால் தீர்மானம் நடைமுறைகள்) விதிகள் 2016 (சிஐஆர்எப் விதிகள்) சேப்டர் IVன்படி கோரிக்கைக்கான அத்தாட்சிகளை அளிக்க வேண்டும். சிஐஆர்எப் விதிகளின்படி கீழ்க்குறிப்பிட்டுள்ள வடிவில் கோரிக்கை அத்தாட்சிகளை அளிக்க வேண்டும்.

★ படிவம் பி – செயல்பாட்டு கிரிடிட்டார்களின் கோரிக்கைகள்

★ படிவம் சி – நிதி கிரிடிட்டார்களின் கோரிக்கைகள்

★ படிவம் டி – ஒர்க்மென் மற்றும் ஊழியர்களின் கோரிக்கைகள்

★ படிவம் இ – ஒர்க் மென் மற்றும் ஊழியர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் கோரிக்கைகள்

★ படிவம் எப் – கிரிடிட்டார்களின் கோரிக்கைகள் (நிதி கிரிடிட்டார்கள் மற்றும் செயல்பாட்டு கிரிடிட்டார்கள் தவிர)

படிவத்தின் நகலை பெற மேற்சொன்ன படிவங்களை இணையதளம் www.ibbi.gov.in (http://www.ibbi.gov.in/downloadform.html) லிருந்து படியிறக்கம் செய்து கொள்ளலாம் மற்றும் சிஐஆர்பி விதிகள்

தவறான வழியில் உரிமைக்கான அத்தாட்சியை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

இடைக்கால தீர்மான புரொபஷனல் பெயர் மற்றும் கையெழுத்து
விஜய்குமார் வி. அய்யர்

தேதி மற்றும் இடம்: மார்ச் 30, 2018

CORRIGENDUM TO THE PUBLIC ANNOUNCEMENT DATED MARCH 16, 2017 ("PA") WITH RESPECT TO THE EXIT OFFER TO THE PUBLIC SHAREHOLDERS OF

A.V. THOMAS AND COMPANY LIMITED

Corporate Identification Number: U51109KL1935PLC000024
Registered Office: W - 21/674, Beach Road, Alappuzha, Kerala, 688012, India
Tel: 0484-2315312; **Email:** avt.alapuzha@gmail.com ,
Contact Person: Mr. R. Venugopalan

This Corrigendum is made to the PA to the Public Shareholders of A.V. Thomas and Company Limited that Exit Offer made pursuant to SEBI Circular No.SEBI/HO/MRD/DSA/CIR/P/2016/110 dated October 10, 2016 stands extended for a further period from April 7, 2018 to June 30, 2018. All other terms and conditions mentioned in the earlier PA dated March 16, 2017 remain unchanged.

The Public Shareholders who wish to tender their Equity Shares in the said Exit Offer are requested to submit the duly filled in Form of Acceptance, along with the necessary enclosures, to RTA, Cameo Corporate Services Limited latest by June 30, 2018 at the following address:

Cameo Corporate Services Limited
Address: Subramanian Building, #1 Club House Road, Chennai- 600002
Email: priya@cameoindia.com; Tel No.: +91 44 2846 0390
Contact Person: Ms.Sreepriya K.

In case of any queries / clarifications regarding the Exit Offer, the Shareholders can contact either the RTA or the Company at the above mentioned address.

ON BEHALF OF THE PROMOTERS
Sd/-

Date: 28.03.2018
Place: Chennai

பைவ் கோர் எக்ஸிம் லிமிடெட்

L32200TN1994PLCO26958
பதிவு அலுவலகம்: சிட்டி சென்டர் பிளாசா, 3வது தளம் அறை எண். 7/48,
அண்ணா சாலை,சென்னை–600 002. Tel: (91) - 7042292838,
Email: manager.roc@5core.in, Website: www.fivecoreexim.com

அறிவிப்பு

செப்டம்பர் 7, 2016 முதல் அமுலுக்கு வந்துள்ளபடி, கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 124 (6) மற்றும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திருப்பியளித்தல்) விதிகள் 2016ன்படி, இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இதர விஷயங்களுக்கிடையே விதிகளின்படி, தொடர்ந்து ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக பங்குதாரர்களால் டிவிடெண்ட் கோரப்படாத அல்லது செலுத்தப்படாத அனைத்து பங்குகளும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி என்ற பெயருக்கு மாற்றப்படும்.

எனவே, 2009–10 நிதி ஆண்டிலிருந்து கடந்த 7 ஆண்டுகளாக டிவிடெண்ட் செலுத்தப்படாத

தேதி: 27.03.2018
இடம்: சென்னை